1st November 1962]

*1022 கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம் : கனம் பொதுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை அணையிலிருந்து கம்பிக்குடி கண்மாய்க்குத் தண்ணீர் சப்ளை செய்வதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா ?

(இ) அப்படியென்றால், பரிசீலனையின் முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

தூர் எடுக்கும் இயந்திரங்கள் (பழுது பார்க்கும் தொழிலகம்)

*1023 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் (திரு. முனு ஆதி சார்பாக) கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தாம்பரத்தின் அருகாமையிலிருக்கும் சேலையூரில் அமைக்கப் பட்டிருக்கும், எரி தூர் எடுக்கும் இயந்திரங்களைப் பழுது பார்க்கும் தொழிலகத்தை, அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : உண்டு.

Old age pension

*1024. *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of persons who have been granted pension under the scheme of pension for aged destitutes in each district so far ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of persons who have been sanctioned pensions, under the scheme upto 31—7—1962 is—

Chingleput	384
North Arcot	831
South Arcot	1,016
Thanjavur	1,259
Tiruchirappalli	1,054
Ramanathapuram	1.093
Tirunelveli	2,950
Madurai	2,779
Salem	1,778
Coimbatore	1,440
The Nilgiris	133
Madras	629
Kanyakumari	181
Total ...	15,527

[1st November 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஆண்டுக்கு மொத்தம் எவ்வளவு செலவாகும் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. வை சங்கரன் : ஒரு சில மாவட்டங்களிலே கிளார்க்குகள் இல்லாத காரணத்தினால், இந்த அப்ளிகேஷன்களை வாங்கி உடனடியாகப் பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்படுகிறதென்று குறை கூறப்படுகிறது. ஆகையால் அரசாங்கம் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதென்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இம்மாதிரிப் புகார்கள் வரும் போதெல்லாம் கவனிக்கப்பட்டு எந்த அளவிற்குச் சிப்பந்திகள் வைக்க முடியுமோ அந்த அளவிற்கு வைக்கப்படுகிறார்கள். ஆனால் பிரத்தியேகமாகச் சிப்பந்திகள் வைப்பதில் கொஞ்சம் தாமதம் ஆகி விட்டது. அவர்கள் மே மாதம் 15-ம் தேதிதான் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே அதற்குமுன் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அதற்குப் பின்னால் தாமதம் ஏற்படுவதற்கு இடம் இல்லை.

SRI M. WILLIAM : Sir, has any complaint been received that the village officers are not co-operating in settling these claims ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have no such information.

திரு மீ. கலியாணசுந்தரம் : இந்தத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட டெபுடி தாசில்தார் போன்ற அதிகாரிகள் விட்டுப்போன மனுக்களை அடுத்த ஆண்டிலாவது எடுத்துப் பரிசிலனை செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு விட்டால் மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பரிசீலனை செய்யப்படாமல் இருந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : முதியோர்கள் யார் என்று நிர்ணயிப்பதில் ஒரு சிலர் விஷயத்தில் வயது போன்ற விவரங்கள் வோட்டர் லிஸ்டிலோ அல்லது தங்களிடத்திலோ இல்லாத காரணத்தால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இப்படி சிக்கலான கேஸ்களில் முதியோர்களை நிர்ணயிப்பதற்கு டாக்டர்களின் உதவியை நாடுவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வயது நிர்ணயிப்பதைப் பற்றி விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின் படி கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. சங்கரன் : சில முதியோர்களுக்குப் பிள்ளைகள் இருந்தாலும், அவர்கள் பைத்தியமாக இருப்பதாலும், சிலர் தாய் தந்தையர்களைப் புறக்கணித்து விடுவதாலும், அவர்களுக்கும்

1st November 1962]

இன்னும் வீட்டிலிருந்து ஓடிச் சென்றவர்களுக்கும் இந்த அனுகூலத்தை விஸ்தரிப்பதற்குச் சர்க்கார் விதிகளைத் தளர்த்துவதற்கு உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுதுதிருக்கிற விதிகளின்படி இந்தத் திட்டம் அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஓராண்டு அனுபவத்தைக் கொண்டு இந்த விதிகளிலே ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமென்றால், பின்னர் கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதியோர்களுக்கு சாங்ஷன் செய்யப்படும் தொகை, மணியார்டர் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறதா, அல்லது அவர்கள் கஜானுக்களுக்குச் சென்று அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : Postal money order (without deducting the money order Commission) மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : மொத்தம் எத்தனை மனுக்கள் வந்தன என்கிற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பத்தவத்சலம் : எல்லா ஜில்லாக்களிலிருந்தும் மொத்தம் 1,84,390 விண்ணப்பங்கள் வந்தன.

திரு. சா. கணேசன் : முதியோர் பென்ஷனின் மூலமாகக் கிடைக்கிற தொகையை விட, உத்யோகத்திலிருந்து ஓய்வு பெற்ற கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் பென்ஷன் தொகை மிகக் குறைவாக இருப்பதனால், அந்தப் பென்ஷனை நிறுத்திவிட்டு முதியோர் பென்ஷன் திட்டத்தில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அதன்மீது என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த முதியோர் பென்ஷன் யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த விதிகளுக்கு அவர்கள் உட்பட்டால் கவனிக்கப்படும்.

MR. SPEAKER : Questions 1025, 1026, 1027 and 1028 may be taken up together.

***1025 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் முதியோர் பென்ஷனுக்காக எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(இ) அவைகளில் ஆரணி தாலூக்காவில் எத்தனை மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 16,469 applications as on 31st July 1962.

(b) Twenty three cases as on 31st July 1962.